சென்னை முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள், சென்னை-08

ந.க.எண்.6494/ஆ3/2022, நாள்.15.09.2022

பொருள் : பள்ளிக்கல்வி – சென்னை – அனைத்து வகைப் பள்ளிகள் – பயிலும் மாணாக்கர்கள் – பணியாளர்கள் பாதுகாப்பு – வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ள அனைத்து வகைப் பள்ளி தலைமையாசிரியர்கள் / முதல்வர்களுக்கு – அறிவுரைகள் வழங்குதல் – சார்பு

பார்வை : சென்னை-6, பள்ளிக்கல்வி ஆணையரின் செயல்முறைகள் ந.க.எண்.001446/பிடி1/இ1/2022, நாள்.12.09.2022.

-------

பார்வையில் காண் பள்ளிக் கல்வி ஆணையரின் செயல்முறைகளின்படி, அனைத்து வகைப் பள்ளிகளில் பயிலும் மாணாக்கர்கள், பணியாளர்கள் பாதுகாப்பு சார்ந்து வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ள அனைத்து வகைப்பள்ளி தலைமையாசிரியர்கள் / முதல்வர்களுக்கு கீழ்காணும் அறிவுரைகளை வழங்குமாறும், தங்கள் பள்ளிகளின் பார்வை மற்றும் ஆய்விற்கு செல்லும்போது இது குறித்து பள்ளித் தலைமையாசிரியர்கள் / முதல்வர்களுக்கு அறிவுறுத்துமாறும் அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள் / வட்டாரக் கல்வி அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

<u>முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்</u>

1. பள்ளி வளாகத்திற்குள், மாணாக்கர்களுக்கு பாதிப்பினை ஏற்படுத்தக்கூடிய வகையில் உள்ள திறந்தநிலை கிணறுகள் / நீர்நிலைத் தொட்டிகள், இடிந்துவிழும் நிலையில் உள்ள கட்டிடங்கள் மற்றும் சுற்றுச் சுவர் ஏதேனும் இருப்பின் அவற்றை உடன் அகற்றிட உரிய வழிமுறையில் தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.

2. தங்கள் கல்வி மாவட்டத்தில் உள்ள அனைத்து பள்ளிகளிலும் பள்ளி வளாகங்களில் ஆழ்துளை கிணறுகள் இருந்தால் அவை பாதுகாப்பாக மூடப்பட்டுள்ளனவா என ஆய்வு செய்ய வேண்டும்.

3. பள்ளி வளாகத்தில் பயன்பாடில்லா ஆழ்துளை கிணறுகள், கழிவுநீர் தொட்டிகள், கிணறுகள், நீர் சேமிப்பு தொட்டிகள் போன்றவற்றை நிரந்தரமாக மூடப்பட்டுள்ளதா என்பதை உறுதி செய்ய வேண்டும்.

4. மூடப்பட்ட ஆழ்துளை கிணறுகள் மற்றும் தொட்டிகள் உள்ள இடங்களை அடையாள குறியிட்டு, தனியாக அடையாளப்படுத்த வேண்டும். அவற்றை தரை மட்டத்தில் இருந்து உயர்த்தி, பாதுகாப்பு அம்சங்களை ஏற்படுத்த வேண்டும்.

5. பள்ளி வளாகத்தில் ஆபத்தான நிலையில் உள்ள உயர்மின் அழுத்தமுள்ள மின்கம்பங்கள் மற்றும் அறுந்து தொங்கக்கூடிய மின்கம்பிகள் இருப்பின் அவைகளை உடனடியாக அகற்றப்பட உரிய வழியில் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

6. மின் இணைப்புகள் சரியாக உள்ளனவா என்றும், மின் கசிவு, மின்சுற்று கோளாறுகள் ஏதேனும் உள்ளனவா என்பதை ஆய்வு செய்து பாதுகாப்பை உறுதிபடுத்திடவும், தேவையெனில் மின்

இணைப்பை தற்காலிகமாக துண்டித்து வைக்கவும் அறிவுறுத்தப்படுகிறது. இத்தகைய நேர்வுகளில் மின்வாரிய பொறியாளரை உடனடியாக தொடர்பு கொண்டு இதனை சரி செய்திட அறிவுறுத்தப்படுகிறது.

7. பள்ளி வளாகத்தில் விழும் நிலையில் மரங்கள் ஏதேனும் இருப்பின் அதனை உடனடியாக அப்புறப்படுத்தவும் மற்றும் ஆபத்தான நிலையிலுள்ள மரக்கிளைகளை வெட்டி அகற்ற உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

8. சுவிட்சுகள் (Switches) சரியாக உள்ளனவா, மழைநீர் படாதவண்ணம் உள்ளனவா என்பதையும் தலைமையாசிரியர்கள் ஆய்வு செய்ய வேண்டும்.

9. பள்ளியில் உள்ள அனைத்துக் கட்டடங்களின் மேற்கூரைகள் உறுதியாக உள்ளனவா என்று அவ்வபோது ஆய்வு செய்து உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். மேற்கூரையில் நீர் தேங்காவண்ணம் உடனடியாக தேங்கியுள்ள நீரை வெளியேற்ற நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

10. மழைக்காலம் என்பதால் பள்ளி வளாகத்தில் தேங்கும் தண்ணீர் கொசுக்கள் உற்பத்திக்கு வழிவகுக்கும் என்பதால் வளாகத்தில் தண்ணீர் தேங்கா வண்ணம் பராமரிக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

11. பள்ளியில் பத்திரப்படுத்தப்பட வேண்டிய முக்கிய ஆவணங்கள் தரைதளத்தில் வைக்கப்பட்டிருப்பின் மழை நீரினால் சேதம் ஏற்படாவண்ணம் பாதுகாப்பாக வேறு தளங்களில் மாற்றி பாதுகாப்பாக பராமரிக்கப்படுவதை உறுதி செய்துகொள்ள வேண்டும்.

12. மாணாக்கர்களின் பாதுகாப்பு கருதி, அனைத்து அரசு மற்றும் தனியார் பள்ளி கட்டடங்கள், கட்டட நெறிமுறைகள் மற்றும் பள்ளி பாதுகாப்பு குறித்து தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையத்தால் வெளியிடப்பட்டுள்ள வழிகாட்டுதலுக்கிணங்க உள்ளனவா என்பதை உறுதி செய்தல் வேண்டும்.

13. மேல் தளத்தில் தடைப்பட்ட வடிகால்கள், மாடிப் படிக்கட்டுகளை சுத்தம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும்.

14. பலவீனமான மற்றும் பழுதடைந்துள்ள கட்டடங்களை பயன்படுத்துவதை முற்றிலுமாக தவிர்க்கப்படவேண்டும்.

15. சுகாதாரம் மற்றும் உயிர் பாதுகாப்பிற்கு செய்ய வேண்டியவை மற்றும் செய்யக் கூடாதவை குறித்து மாணாக்கர்களுக்கு வாரம்தோறும் ஒரு நாள் காலை வழிபாட்டுக் கூட்டத்தில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படவேண்டும்.

16. கொரோனா நோய்த் தடுப்பு நடவடிக்கைகளை தவறாது பின்பற்ற உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும்.

மேற்கண்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் பள்ளியில் மேற்கொள்ளபட்டுள்ளதா என்பதனை பள்ளி பார்வையின்போது ஆய்வு செய்ய அனைத்து மாவட்டக்கல்வி அலுவலர்கள் மற்றும் அனைத்து வட்டாரக்கல்வி அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

ஒம்/---------

முதன்மைக் கல்வி அலுவலர்

சென்னை.

பெறுநர்:

1. அனைத்து வகைப் பள்ளி தலைமையாசிரியர்கள் / முதல்வர்கள், சென்னை மாவட்டம். (மாவட்ட / வட்டாரக் கல்வி அலுவலர்கள் மூலமாக)
2. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள் மற்றும் அனைத்து வட்டாரக் கல்வி அலுவலர்கள், சென்னை மாவட்டம்.

நகல்:

1. சென்னை-06, பள்ளிக்கல்வி ஆணையர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
2. சென்னை-06, மெட்ரிக் பள்ளிகள் இயக்குநர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.
3. சென்னை-06, தொடக்கக் கல்வி இயக்குநர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.
4. சென்னை-03, சென்னை பெருநகர மாநகராட்சி கல்வி அலுவலர் அவர்களுக்கு கனிவுடன் அனுப்பப்படுகிறது.